மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.16/2021
அ.வ.எண்.83/2008

1. லஷ்மி
2. கமலா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சுந்தரராஜன் (இறந்துவிட்டார்)
2. பரிமளா (இறந்துவிட்டார்)
3. மணி (எ) சாரதா
4. சரோஜா
5. சின்னதாயி
6. கொன்றி
7. சேகர்
8. ஆணையாளர், நங்கவள்ளி பஞ்சாயத்து யூனியன்.
9. முனுசாமி
10. சுதா
11. அரவிந்த் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

1. மாதம்மாள்
2. முனியம்மாள்
3. தங்கம்மாள்
4. ராசுக்குட்டி ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 24.08.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.மாலதி அவர்கள் ஆஜராகியும், 1,2 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 3 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 1 முதல் 4 உத்தேசதரப்பினர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9 பிரிவு 151ன் கீழ் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுவின் சுருக்கம்</u> : –

மனுதாரர்கள் தாக்கல் செய்த சீராய்வு மனுஎண்.4752/2011ல் இவ்வழக்கினை விசாரிக்க 31.01.2020 வரை தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தான் 12.09.2019 ல் 6ம்பிரதிவாதி உத்தேச தரப்பினர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். 6ம்பிரதிவாதியின் மகன்களான முனியப்பன் மற்றும் ராஜா திருமணமாகாமல் இறந்துவிட்டனர். மனுதாரர்கள் 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க கோரி தாக்கல் செய்த இ.ம.எண்கள்.08/2021 முதல் 10/2021 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு புதிய மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலே கூறிய காரணத்தால் தான் 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காததால் வழக்கு அற்றுப்போய்விட்டது. எனவே வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 3ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

சீராய்வு மனுவில் தடையுத்தரவு இருந்ததால் 12.09.2019ல் இறந்த கோன்றி என்பவரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலாமல்போனது என கூறுவது ஏற்கத்ததக்கதல்ல. இறந்துபோன கோன்றிக்கு உத்தேச தரப்பினரை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். வழக்கை காலதாமதப்படுத்த மனுதாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்த சீராய்வு மனு எண்.4752/2011ல் இவ்வழக்கினை விசாரிக்க 31.01.2020 வரை தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது எனவும், இந்நிலையில் தான் 12.09.2019ல் 6ம்பிரதிவாதி உத்தேச தரப்பினர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் எனவும், 6ம்பிரதிவாதியின் மகன்களான முனியப்பன் மற்றும் ராஜா திருமணமாகாமல் இறந்துவிட்டனர் எனவும், மனுதாரர்கள் 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க கோரி தாக்கல் செய்த இ.ம.எண்கள்.08/2021 முதல் 10/2021 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு புதிய மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலே கூறிய காரணத்தால் தான் 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காததால் வழக்கு அற்றுப்போய்விட்டது எனவும், எனவே வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் சீராய்வு மனுவில் தடையுத்தரவு இருந்ததால் 12.09.2019ல் இறந்த கோன்றி என்பவரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலாமல்போனது என கூறுவது ஏற்கத்ததக்கதல்ல எனவும், இறந்துபோன கோன்றிக்கு உத்தேச தரப்பினரை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் எனவும், வழக்கை காலதாமதப்படுத்த மனுதாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3ம் எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இறந்துபோன 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க கோரி மனுதாரர்கள் இ.ம.எண்கள்.08/20 முதல் 10/20 வரை உள்ள மனுக்களை தாக்கல் செய்து அந்த மனுக்கள் கடந்த 10.02.2021ல் புதிய மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு அந்த மனுக்கள் தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதில் இ.ம.எண்.10/2020ல் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அம்மனு கடந்த 10.02.2021ல் தள்ளுபடி செய்யப்பட்டு புதிய மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) இந்நிலையில் 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் 6ம்பிரதிவாதியின் வாரிசுகள் உத்தேச தரப்பினர்கள் என்பதை நிரூபிக்க மனுதாரர்கள் எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என கட்சி செய்தபோதும், உத்தேச தரப்பினர்கள் 6ம்பிரதிவாதியின் வாரிசுகள் இல்லை என குறிப்பாக மறுத்து கட்சி செய்யவில்லை. எனவே மறுக்கப்படாத சங்கதிகளை ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாக எடுத்து கொள்ளலாம் என்பதால் உத்தேச தரப்பினர்கள் தான் 6ம் பிரதிவாதியின் வாரிசுகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) மனுதாரர்கள் வழக்கு அற்றுபோனதை ரத்து செய்ய கூறியுள்ள காரணம் ஏற்புடையதா என்பதை பரிசீலனை செய்ததில் சீராய்வு மனு எண்.4752/2011ல் தடையுத்தரவு இருந்ததால் மனுதாக்கல் செய்யவில்லை என மனுதாரர்கள் கூறியுள்ளனர். ஆனால் தரப்பினர்கள் இறக்கும்போது வாரிசை சேர்க்க கோரி மனுதாக்கல் செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை. மேலும் அதற்காக மனுதாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது. எனவே சீராய்வு நிலுவையில் இருந்ததால் மனுதாக்கல் செய்யவில்லை என மனுதாரர்கள் தரப்பில் காலதாமதத்திற்கு முன்னிலைப்படுத்திய காரணம் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) இருந்தபோதும் இவ்வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியுள்ளதால் 6ம்பிரதிவாதியின் வாரிசுகள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் ஆவர். ஆகவே 6ம்பிரதிவாதியின் வாரிசுகள் இல்லாமல் இவ்வழக்கினை தீர்மானிக்க முடியாது என்பதால் 6ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காததால் வழக்கு அற்றுபோனதை செலவுத்தொகை செலுத்தும்பட்சத்தில் ரத்து செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மனுதாரர்களால் 3ம்எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு

ரூ.300/- செலவுத்தொகையாக 01.08.2021க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு ரூ.300/- செலவுத்தொகையாக . 01.09.2021க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க.02.09.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.